1981 மே 11]

ஆ) திட்டத்தை விரைவில் முடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கான்ட்ராக்டர் வேலையை முடித்துத் தருவதாக ஒப்புக் கொண்ட காலம் என்ன? காலதாமதத்திற்குக் காரணம் என்ன? வேண்டுமென்றே அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்துவதால், கான்ட்ராக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்குத் தேவையான புவி ஈர்ப்பு குழாய்கள் பதிக்கும் வேலைகள் மலையைச் சார்ந்த இடங்களில் செய்யவேண்டியிருப்பதால் இக் குழாய்களை எடுத்துச் செல்லும் பணிகளில் மிகுந்த சிரமம் இருக்கிறது. பொருள்களுக்கும், ஆட்களுக்கும் ஆபத்து விளைவிக்க கூடியதாக உள்ளது. மேலும் திறமை வாய்ந்த வேலையாட்களும் உடனடியாக கிடைப்பதில்லை. ஆகவே இவ்வேலைகளில் முன்னேற்றம் காட்டுவதில் சில நேரத்திலே மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆயினும் இந்த வேலைகளை சீக்கிரம் ஒரு ஈடுபாட்டு உணர்வுடன் ஜூன் 1981க்குள் செய்து முடிக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கும் சாகுபடிக்கும் தண்ணீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 1057 திரு. எம். செல்லமுத்து. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து தஞ்சை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைத்து சிறு விவசாயிகளுக்கும் சாகுபடிக்கும் தண்ணீர் கொடுக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தஞ்சை மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு சாகுபடி செய்வதற்கு தேவையான தண்ணீர் கொடுக்க, குழாய் கிணறுகள் அமைக்கத் திட்டமிட்டு உபரி நிதியிலிருந்து 50 விழுக்காடும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் உதவித்தொகையாக 50 விழுக்காடும் பெற்று இத்திட்டம் தொடங்க உத்தரவிடப்பட்டது. 1979–80ஆம் ஆண்டில் பரிட்சார்த்தமாக 170 ஆழ் குழாய் கிணறுகள் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு அவை அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. நடைமுறையில் இந்த சமுதாயக் கிணறு திட்டத்தின் வெற்றியைக் கொண்டு மேலும் பல கிராமங்களுக்கு 1981-82 ஆம் ஆண்டில் விஸ்தரிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த சமுதாய கிணறு என்பது தஞ்சை மாவட்டத்திலும் நம்முடைய மாநிலத்திலும் விவசாய அபிவிருத்திக்கு மிகப்பெரிய அளவில் உதவி செய்யக்கூடிய திட்டம். இன்று ஊராட்சி மன்றங்களிலே பொது நிதியே மிகக் குறைந்தளவில் இருக்கிறபோது இந்தத் திட்டங்கள் எவ்வாறு நிறைவேறும். ஆகவே பாசனத் துறையும், ஊராட்சித் துறையும் ஒன்றாக சேர்ந்து சிறப்புத் திட்டம் ஒன்றை விரைவிலே எடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை 1800 ஆழ் குழாய் கிணறுகள் போட வேண்டுமென்று ஒரு திட்டம் அரசினுடைய பரிசீலனைக்கு வந்து, இன்று 170 ஆழ் குழாய் கிணறுகள் 1979-80-லே போடப்பட்டது. குறிப்பாக இந்தத் திட்டத்தின் மூலமாக தஞ்சை மாவட்டத்திற்கு இது தனி சிறப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காகத் தான் ஆழ் குழாய் கிணறுகளை அந்த பகுதியிலே போட்டோம். காரணம் கோடை காலத்திலே பணப்பயிர்கள் பயிரிடுவதற்கும், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுகிற காலத்தில் நாற்றங்கால் முதலிலே ஏற்படுத்துவதற்காகத் தான் இந்த ஆழ் குழாய் கிணறுகள் உதவியாக இருக்குமென்று அரசினுடைய பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இந்த குழாய் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் உபரி நிதியிலிருந்து தான் 50 விழுக்காடு நாம் கொடுத்திருக்கிறோம். அதைப்போல சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டம், இப்போது அந்தத் திட்டம் இல்லையென்று சொன்னாலும், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழாக இவைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாயக் கிணறுகள் அமைக்கும் திட்டம் ரொம்ப சிறந்த திட்டம். தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஊராட்சி ஒன்றியங்களிலே இதைச் செயல் படுத்துகிறார்கள், நானும் அந்தக் கிணறுகளைப் பார்த்திருக்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களிலே உபரி நிதியில்லாத காரணத்தினாலே அரசாங்கமே அதை முழுவதையும் கொடுத்து தஞ்சை மாவட்டத்திலே இன்னும் பாக்கி இருக்கக்கூடிய கிணறுகளையும் கட்டி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்மிபுகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு ஒன்றியங்களிலே உபரி நிதி இருக்கிறது. இப்போதும்கூட பல ஊராட்சி ஒன்றியங்களிலே பணம் செலவழிக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. நான் சென்று கேட்டேன், அங்கே உள்ள ஆணையர்களையும் மற்ற அதிகாரிகளையும் நீங்கள் மக்களுக்காக நல்லமுறையிலே எப்படிச் செலவு செய்யவேண்டுமோ அந்த முறையிலே அந்தப் பகுதியிலே திட்டங்களை நிறைவேற்ற

1981 மே 11]

வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். உபரி நிதி இருக்கின்ற காரணத்தினால் தஞ்சை மாவட்டத்திலே இன்னும் பல கிணறுகளை ஏற்படுத்தலாம்.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்படுவதைப் போன்று மற்ற மாவட்டங்களிலேயும் வறட்சி நிலையைக்கருத்திலே கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயன் கொடுக்கிற முறையிலே இந்தத் திட்டத்தை செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆவன செய்யும்.

உத்ரமேரூர் ஏரி மராமத்துப்பணி.

*வினா எண். 1058- திரு. எஸ். ஜகத்ரட்சகன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் ஏரியை விஸ்தரிப்பு செய்து ஆழப் படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்தும் திட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், முன்னுரிமை பெற்ற திட்டங்களின் மீது ஆய்வுகள் முடிவுற்றபின், உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்தும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுக்காலமாக ஆழப்படுத்தப்படாத ஏரிகளை, இந்த வறட்சியைப் பயன்படுத்தி, அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்துவதற்கு செயலாக்கத்திட்டம் நிறைவேற்றப்படுமா? மத்திய அரசு கொடுக்கவேண்டிய பணம் தமிழ்நாட்டிற்குக் கொடுத்துவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை).

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்திரமேரூர் ஏரியின் கொள்ளளவு எவ்வளவு? எத்தனை ஏக்கர்கள் அதன் மூலம் பாசன வசதி பெறப்படுகிறது? இந்தத் திட்டம் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஏரியைப் பயன்படுத்தி 4978 ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது. அதனுடைய கொள்ளளவு 958 மில்லியன் கன அடி. அதிலே 351 மில்லியன் கன அடி கொள்ளளவை அந்த ஏரி இழந்திருக்கிறது. திரும்ப அதை எடுத்துச் செய்யலாம் என்று நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்திலே நடுத்தர பாசனத் திட்டத்தை பெரிய அளவிலே செய்யவேண்டுமென்று கருதிய காரணத்தினால் ஏற்கனவே 29.50 லட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு செயல்படுகிறபோது பெரிய அளவிலே செய்யவேண்டிய நிலைமை இருப்பதால் அவ்வாறு செய்யலாம் என்று அரசு கருதியிருக்கிறது.